## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

### ஆர் 1/ ஆர் 4 படிவத்தின் மூலம் பணம் அனுப்பும் போது தொழில் வழங்குநர்களினால் பின்பற்றவேண்டிய அறிவுறுத்தல்கள்

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தொழில் வழங்குநர்களினால் இந்த நிதியத்திற்கு மாதாந்தம் பங்களிப்புப் பணம் அனுப்பும் போது பின்வரும் அறிவுறுத்தல்களை முறையாகப் பின்பற்றுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01. இந்த நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்தும் தொழில் வழங்குநர்களினால் ஒவ்வொரு மாதமும் தனது தொழிலாளர்கள் சார்பாக அவர்களது மொத்த உழைப்பிலிருந்து 3% இந்த சபைக்கு செலுத்துதல் வேண்டும். குறித்த ஒரு மாதத்திற்கு செலுத்தப்படவேண்டிய தொகை அடுத்துவரும் மாதத்தின் இறுதி வேலை நாளன்று அல்லது அதற்கு முன்னர் இந்த சபைக்கு கிடைக்கப்பெறல் வேண்டும்.

02. சகல அங்கத்துவப் பணக் கொடுப்பனவின் போதும் ஆர் 1, ஆர் 4 பணம் அனுப்பும் படிவங்கள் மூலம் அனுப்புதல் வேண்டும். ஊழியர்களின் எண்ணிக்கை 15 க்கு குறைவாக இருக்குமிடத்து ஆர் 4 படிவமும் ஊழியர்களின் எண்ணிக்க 15 ஐ விட அதிகமாக இருக்குமிடத்து ஆர் 1 படிவமும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

03. ஆர் 1 படிவத்தினால் பணம் அனுப்பும் தொழில் வழங்குநர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் ஊழியர்கள் 15 க்கு குறைவாக உள்ள போதிலும் ஆர் 4 பணம் அனுப்பும் படிவத்தின் மூலம் பங்களிப்புத் தொகையை செலுத்தக்கூடாது.

04. ஆர் 1 படிவத்தைப் பயன்படுத்தும் தொழில் வழங்குநர்களினால் ஒவ்வொரு அங்கத்தவரினதும் பங்களிப்புத் தொகை விபரத்தை படிவம் II அறிக்கைகள் மூலம் அரையாண்டுக்கு ஒரு முறை அங்கத்துவக் கணக்குப் பிரிவுக்கு பின்வருமாறு சமர்ப்பித்தல் வேண்டும்.

| காலப்பிரிவு | அனுப்ப வேண்டிய திகதி |
|---|---|
| ஜனவரி தொடக்கம் ஜூன் வரை படிவம் ॥ (முதலாவது அரையாண்டு) | ஆகஸ்ட் மாதம் முடிவடைவதற்கு முன்னர் |
| ஜூலை தொடக்கம் டிசம்பர் வரை படிவம் ॥ (இரண்டாவது அரையாண்டு) | அடுத்துவரும் ஆண்டின் பெப்ரவரி மாதம் முடிவடைவதற்கு முன்னர் |

இது தொடர்பாக தேவையான விடயங்களைப் பெற்றுக்கொள்வதற்கு தொலைபேசி இலக்கம் 011 2369596 ஊடாக முகாமையாளர் - அங்கத்துவக் கணக்குகள் (பாரிய வகை) மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

05. ஊழியர்களின் எண்ணிக்கை 15 ஐ விட அதிகரிக்கும் போது பணம் அனுப்பும் படிவத்தை ஆர் 4 இலிருந்து ஆர் 1 க்கு மாற்றும் போது அவ்வாறான மாற்றங்கள் கண்டிப்பாக ஜனவரி அல்லது ஜூலை மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படல் வேண்டும். அதற்கு முன்னர் அது தொடர்பாக இந்த சபைக்கு அறிவித்தல் வேண்டும். (தொலைபேசி இல 0112581704 தொடர் 623)

06. சமர்ப்பிக்கப்படும் சகல பணம் அனுப்பும் படிவங்களிலும் தொழில் வழங்குநரின் ஒப்பம், தொலைபேசி இலக்கம், மற்றும் மின்னஞ்சல் முகவரி (இருக்குமிடத்து) குறிப்பிடல் வேண்டும்.

07. ஆர் 4 பணம் அனுப்பும் படிவங்களில் ஊழியர்களின் முதலெழுத்துக்களுடன் பெயர், அங்கத்துவ இலக்கம், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை குறிப்பிடுதல் வேண்டும். அந்த தகவல்கள் ஒவ்வொரு மாதமும் சமர்ப்பிக்கப்படும் பணம் அனுப்பும் படிவங்களோடு ஒத்திருத்தல் வேண்டும்.

08. காசோலைகள் "**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை**" எனும் பெயருக்கு எழுதப்படல் வேண்டும். பின் தேதியிடப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பூரணமற்ற காசோலைகள் மற்றும் பணம் அனுப்பும் படிவங்களை சபைக்கு சமர்ப்பிக்கும் காரணத்தினால் அல்லது தாமதித்து மாதாந்த பங்களிப்புத் தொகைகளை சபைக்கு செலுத்துவதன் மூலம் கணக்கிடப்படும் தண்டப் பணத்தைச் செலுத்தும் பொறுப்பை தொழில் வழங்குநர்கள் பொறுப்பேற்க வேண்டும். பணம் அனுப்பும் படிவத்தில் வினவப்பட்டுள்ள சகல தகவல்களையும் சரியாக குறிப்பிடுதல் வேண்டும்.

09. பணம் அனுப்பும் படிவங்கள் மற்றும் படிவம் II அறிக்கைகளின் பாவனை இன்றி விரைவாகவும் இலகுவாகவும் கொடுப்பனவுகள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை சமர்ப்பிப்பதற்கு **இணையத்தள** வசதி செய்யப்பட்டுள்ளதோடு அந்த முறைகளை பயன்படுத்துமாறும் வேண்டப்படுகின்றீர்கள். மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கம் 011 2368508 ஊடாக நிதி முகாமையாளர் (பங்களிப்புத் தொகை சேகரிப்பு) அழைக்கவும்.

10. பணமாக இந்த நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தும் தொழில் வழங்குநர்களுக்கு இலங்கை வங்கி - டொரின்டன் கிளை, இலங்கை வங்கி புறக்கோட்டை மேல்தரக் கிளை அல்லது மக்கள் வங்கி நாராஹேன்பிட்ட கிளைக்கு **<u>மாத்திரம்</u>** செலுத்துவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

11. மேலே குறிப்பிடப்பட்டுள்ள முறைகள் மூலம் பணம் செலுத்த முடியாத தொழில் வழங்குநர்கள் மாத்திரம் காசுக் கட்டளைகளை உபயோகிக்க முடியும் என்பதோடு பணம் மாற்றப்படும் அலுவலகம் **<u>கொழும்பு</u>** என குறிப்பிடப்படுதல் வேண்டும்.

12. காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் சபையின் பிரதான அலுவலகத்திற்கு, பிராந்திய அலுவலகங்களுக்கு அல்லது கொழும்பு 01, இலங்கை வங்கி 05 ஆவது நகரக் கிளை கட்டிடத்தில் அமைந்துள்ள

ஊ.ந.பொ.நி. காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படும் அலுவலகத்திற்கு ஒப்படைக்க முடியும்.

13. ஊழியர்களுக்கு சம்பளம் / வேதனம் வழங்குவதற்கு முன்னர் **<u>எதிர்வரும் மாதங்களுக்கான பங்களிப்புத் தொகை செலுத்துவது</u>** ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டத்திற்கு முரணானது என்றபடியால் தொழில் வழங்குநர்கள் அவ்வாறு செய்தல் கூடாது. ஏதேனும் காரணத்தினால் அவ்வாறு செலுத்தப்பட்டால் உரிய தொழில் வழங்குநருக்கு அது திருப்பி அனுப்பப்படும்.

14. ஊழியர்களுக்காக தவறுதலாக அல்லது மிகையாக இந்த நிதியத்திற்கு பணம் செலுத்தப்பட்டிருப்பின் அதனை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக சபைக்கு செய்யப்படும் வேண்டுகோள்கள் அத்தகைய பணம் செலுத்தப்பட்ட தினத்திலிருந்து **<u>ஒரு வருட காலத்திற்குள்</u>** செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறான வேண்டுகோள்கள் உரிய காலத்திற்குள் செய்யப்படாவிட்டால் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள தொகைகளை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாது.

15. நிறுவனத்தின் பெயர் அல்லது முகவரி மாற்றமுறும் சந்தர்ப்பத்தில் மற்றும் நிறுவனம் மூடிவிடப்படும் போது அது தொடர்பாக பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு தொலைபேசி இல 011 2368160, 011 2503911 அல்லது 011 2581704 அழைக்கவும்

உதவிப் பொது முகாமையாளர் - பங்களிப்புத் தொகை சேகரிப்பு மற்றும் தண்டப்பணம்
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை
10 ஆம் மாடி, தொழில் செயலகம்.
த.பெ. 807
கொழும்பு 05